**MCOP NO: 4008/2021** **DATE:17.11.2025**

ம.சா :1

பெயர் : திரு. மேனகா

க/பெ : திரு. மதன்

வயது : 27

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:**

**முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்தில் அடிப்பட்ட நபர் மீது மோதியது கார் என்று எனது மனுவில் காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் காட்டப்பட்டுள்ளது. எனது மனுவில் 21(a)-ல் எனது கணவரின் வாட்ச் மற்றும் துணிகளில் சேதம் ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்க்கவில்லை. எனது கணவர் விபத்தின்போது தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் அதை பொறுத்து எனக்கு தெரியாது. நான் வேலூர் மாவட்டம் ஆர்காடு என்ற ஊரியில் தான் நிரந்திரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது மனுவில் தற்போது வசித்து வருவதாக காட்டும் விலாசத்தில் நான் குடியிருக்கவில்லை என்றாலும், மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் பழவந்தாங்களில் குடியிருப்பதாக என்னுடைய விலாசத்தை தவறாக காட்டி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மது பழக்கத்திற்கு அடிமையானவர் என்றால் சரியல்ல. விபத்து தேதியில் எனது கணவர் மது அருந்தி இருந்தார் என்றால் அது தவறு. முதல் பிரமாண பத்திரிக்கையில் தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 ஆணங்களை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து குறித்த மாதரி வரைபடம், பார்வை மகஜர் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் தலைக்கவசம் அணியாமலும், மது அருந்தி விட்டு அதிவேகமாக சென்று முதலாம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் வேலைக்கு செல்லவில்லை என்பதால் தான் அவரின் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 12-ம் வகுப்பு படித்துள்ளேன். நான் வீட்டு வேலை செய்து

ஜீவனம் நடத்தி வருகிறேன். நான் மாதம் ரூ.8000/- முதல் ரூ.9,000/- வரை சம்பாதித்து வருவதாலும், எனது கணவரின் தகப்பனாருக்கு விவசாய நிலங்கள் இருப்பதாலும், அதிலிருந்து வரும் வருமானம் எனக்கும் வருவதால், இறந்துபோன எனது கணவரின் வருமானத்தை சார்ந்து நான் இருக்கவில்லை என்றால் சரியல்ல. என்னைத்தவிர மற்ற மனுதாரர்களும் வெவ்வேறு தொழில்கள் செய்து வருமானம் ஈட்டி வருவதால் அவர்களும் எனது கணவரின் வருமானத்தை சார்ந்து இல்லை என்றால் சரியல்ல. விபத்தின்போது 2-ம் எதிர்மனுதாரர் சரியான திசையில் வந்தார் என்றும், எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.